தினமணி

## துவரை சாகுபடிக்கு மானியம்

**பழனி**

பழனி சுற்று பகுதிகளில் துவரை சாகுபடிக்கு அதிகப்படியான மானியங்கள் வழங்கப்படவுள்ளது என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பழனி வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி வெளியிட்டுள்ள அறிக்கை: பழனி வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் நடப்பு ஆண்டில் பயறு உற்பத்தியினை அதிகப்படுத்தும் பொருட்டு துவரை நடவு முறை சாகுபடிக்கு அதிகப்படியான மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. துவரை நடவு முறையில் சாகுபடி செய்ய விதை, உரங்கள் ஆகியன மானியத்தில் வழங்கப்படுவதோடு சிறுகுறு விவசாயிகளுக்கு நூறுசத மானியத்துடன் சொட்டுநீர் பாசனமும் அமைத்துத்தரப்படவுள்ளது. சிறு, குறு விவசாயிகள் வட்டாட்சியரிடம் சான்றுகள் பெற்று வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையலாம் என தெரிவித்துள்ளார்.

## 31-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**உடுமலை**

உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 31-ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து கோட்டாட்சியர் நா.குணசேகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வியாழக்கிழமை (அக்.31) காலை 11 மணி அளவில் உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத்தில் உடுமலை, மடத்துக்குளம் வட்டத்தில்

உள்ள விவசாயிகள் பங்கேற்று, தங்களது குறைகளை

எடுத்துக் கூறி தீர்வு

காணலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய விலையில் வேளாண் இயந்திரங்களைப் பெற விண்ணப்பிக்கலாம்

**தருமபுரி**

மானிய விலையில் வேளாண் இயந்திரங்களைப் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்ட வேளாண் துறை பொறியியல் துறை மூலம், விவசாய உற்பத்தி பெருக்கவும், சாகுபடி செலவைக் குறைத்து அதிக வருவாய் ஈட்டவும், தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2013-14-ஆம் ஆண்டுக்கு மானிய விலையில் பல்வகை தானிய கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், பண்ணைக் கருவிகள், பவர் டில்லர், ரோட்டோவேட்டர், தீவனப்புல் இறுக்கும் இயந்திரம், உழுவை இயந்திரம் மற்றும் வேளாண் உபகரணங்கள் மற்றும் குழிபோடும் கருவி போன்ற இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன.

இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.35.50 லட்சத்திலும், இதர விவசாயிகளுக்கு ரூ.155.90 லட்சத்திலும் வழங்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களது பெயர் மற்றும் முகவரி, நிலப்பரப்பு, சர்வே எண் மற்றும் தேவைப்படும் இயந்திரம் போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகம், அரூரிலுள்ள வேளாண் பொறியியல் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்துக்குச் சென்று விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

## செங்கல் சூளைகளுக்கு விறகாக செல்லும் தென்னை மரங்கள்

**குமாரபாளையம்,**

குமாரபாளையம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் வறட்சியில் கருகிய தென்னை மரங்கள் தற்போது செங்கள் சூளைகளுக்கு விறகாகவும், அறுப்பு ஆலைகளில் பலகைகள் அறுக்கவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குமாரபாளையம் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் கிணறுகள் வறண்டன. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக சரிந்தது. இதனால், விவசாயிகள் சாகுபடி செய்வதை மறந்துவிட்ட நிலையில், வயல்களின் வரப்புகளில் வைக்கப்பட்ட தென்னைகள் இளநீராகவும், தேங்காய்களாகவும் கை கொடுத்து வந்தன.

நிலத்தடி நீர்மட்டம் அதல பாதாளத்துக்கு போனதால் தென்னைகளும் போதிய தண்ணீரின்றி கருகத் தொடங்கின. குமாரபாளையம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உயிரிழந்தன. அவ்வப்போது பெய்து வரும் மழையாலும், மேட்டூர் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டதாலும் தற்போது விவசாயிகள் மீண்டும் சாகுபடி பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், விவசாயிகளை அணுகும் வியாபாரிகள், உயிரிழந்த தென்னை மரங்களை விலை பேசி வாங்குகின்றனர். பெரிய மரம் ரூ.500 வரை விற்பனை செய்யப்படுகிறது.

பனை மரம் போல தென்னைகளுக்கு பலமில்லை என்பதால் அறுப்பு ஆலையினரும், செங்கல் சூளையினரும் மிகக் குறைந்த விலையில் வாங்க ஆர்வம் காட்டுகின்றனர்.

பெரிய மரங்கள் கான்கிரீட் கட்டடங்களுக்கு முட்டுகள் கொடுக்க, பலகைகளாக அறுக்க அறுப்பு ஆலையினர் வாங்கிச் செல்கின்றனர். தரம் குறைந்த, சிறிய மரங்கள் செங்கல் சூளைகளில் விறகாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நன்கு வளர்ந்த பெரிய மரத்தை ரூ.500-வரை விவசாயிகளின் தோட்டத்தில் வாங்கும் வியாபாரிகள், ஆள்கூலி, அறுப்புக் கூலி, வண்டி வாடகை சேர்த்து மரத்தை ரூ.1000 முதல் ரூ.1500 வரை விற்பனை செய்கின்றனர்.

ஆசை ஆசையாய் பார்த்துப் பார்த்து வளர்த்த தென்னைகள் கருகியது துயரம்தான் என்றாலும், வயல்களின் ஓரத்தில் கருகிய நிலையில் அவற்றைப் பார்க்க மனம் பொறுக்கவில்லை என்பதால் விற்பனை செய்வதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

## ரூ.8.30 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

**எடப்பாடி,**

கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நிலக்கடலை ரூ.8.30 லட்சத்துக்கு வெள்ளிக்கிழமை ஏலம் மூலம் விற்பனையானது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் உள்ளது. இந்தக் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி, எள், மற்றும் நிலக்கடலை வாரந்தோறும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 1,050 மூட்டை நிலக்கடலைகள் கொண்டு வரப்பட்டது. அதில் உலர்ந்த நிலக்கடலை 60 கிலோ மூட்டை ரூ.1,150 முதல் ரூ. 1,850 வரையும், ஈரப்பதமுள்ள நிலக்கடலை 60 கிலோ மூட்டை ரூ. 800 முதல் ரூ.1,090 வரையும் ஏலம் மூலம் விற்பனையானது. வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் ரூ.8 லட்சத்து 30 ஆயிரத்து நிலக்கடலை விற்பனை நடைபெற்றது.

## ஹெக்டேருக்கு ரூ. 3000 மானியத்தில் இடுபொருள்

**கரூர்,**

திருந்திய நெல் சாகுபடியில் ஹெக்டேருக்கு ரூ. 3000 மானியத்தில் இடுபொருள் வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தின் சராசரி மழையளவு 748.4 மி.மீ. ஆகும். ஆனால், நிகழாண்டில் அக். 23-ம் தேதி முடிய 366.2 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இருப்பினும், இம்மழையைக் கொண்டு மானாவரி பயிர்களான சோளம், கம்பு, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் 7,352 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் முதல் வாரத்தில் சம்பா பருவ நெல் நடவுப் பணிகள் முடியும்.

இதில் சுமார் 9,500 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி நடைபெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருந்து சான்று பெற்ற நெல் விதைகள் விநியோகிக்கப்படுகிறது.

திருந்திய நெல் சாகுபடி முறையை ஊக்குவிக்க ஹெக்டேருக்கு ரூ. 3000 மானியத்தில் இடுபொருள்கள் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா 991 மெட்ரிக்டன், டிஏபி-446 மெ.டன், பொட்டாஷ் 573 மெ.டன், கலப்பு உரங்கள் 1233 மெ.டன் என மொத்தம் 3243 மெ.டன் உரங்கள் கையிருப்பில் உள்ளது என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 84.96 அடி

**தஞ்சாவூர்**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 84.96 அடியாக இருந்தது.அணைக்கு நொடிக்கு 11,110 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.அணையிலிருந்து நொடிக்கு 5,003 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 100 கன அடி வீதமும்,கல்லணைக் கால்வாயில் 1,804 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## வேளாண் தொழில்நுட்ப பயிற்சி முகாம்

**விளாத்திகுளம்,**

நாகலாபுரம் சாமி அய்யா நாடார் மேல்நிலைப் பள்ளியில் வேளாண் பாடப்பிரிவு மாணவர்களுக்கான தொழில்நுட்ப விளக்கம் மற்றும் களை ஒழிப்பு குறித்த செயல்முறை பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு தலைமையாசிரியர் சாந்தி தலைமை வகித்தார். ஆசிரியர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். இதில் விவசாயத்துக்கு தீமை செய்யும் களைகளின் வகைகள், களைகள் பரவும் விதம், களை ஒழிப்பு முறைகள் குறித்து செயல்முறை விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் சுரேஷ்குமார், அன்பு, மணிகண்டராஜன், ஜான்ஸ்டானி மற்றும் மாணவர், மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தர்மபுரியில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் சிறுதானிய உணவு வகைகள்

தர்மபுரி பகுதியில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் நடத்தும் டீக்கடைகளில் சிறுதானிய உணவு வகைகள் இடம் பிடிக்க தொடங்கி உள்ளன.

<u>சிறுதானிய உணவுகள்</u>

தமிழக மக்கள் உடல்நலத்தை மேம்படுத்தும்சிறுதானிய வகைகளை காலம்காலமாக உணவில் அதிக அளவில் பயன்படுத்தி வந்தனர். நாகரீக வளர்ச்சியின் காரணமாக சிறுதானியங்களின் பயன்பாடு படிப்படியாக குறைந்தது. முக்கிய உணவாக அரிசியை மட்டுமே பயன்படுத்தும் பழக்கம் அதிகரித்தது. இதன் விளைவாக அண்மைக்காலமாக தமிழகத்தில் சர்க்கரை நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உயர்ந்துள்ளது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண உணவில் கேழ்வரகு, கொள்ளு, வரகு, சாமை, பயிர்வகைகள் உள்ளிட்ட சிறுதானியங்களை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவத்துறையினர் அறிவுறுத்தி வருகிறார்கள். இதன்காரணமாக அண்மை காலமாக சிறுதானியங்களை உணவில் பயன்படுத்துவது மீண்டும் அதிகரித்து வருகிறது.

<u>கடைகளில் விற்பனை</u>

தர்மபுரி கலெக்டர் அலுவலகம், கோர்ட்டு உள்ளிட்ட அரசுத்துறை அலுவலகங்கள் செயல்படும் பகுதிகளில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் டீக்கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடைகளில் தற்போது கொள்ளு, கொண்டைகடலை, பட்டாணி தட்டைப்பயிறு உள்ளிட்ட சிறுதானியங்களில் செய்யப்பட்ட சுண்டல் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. சில மகளிர் சுயஉதவிக்குழுக்களின் கடைகளில் கொள்ளுரசமும் தற்போது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

## கிருஷ்ணகிரி, உணவு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை வேளாண் அதிகாரி தகவல்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது என்று கிருஷ்ணகிரி வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

<u>நிதி ஒதுக்கீடு</u>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2013–14–ம் நிதியாண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் உற்பத்தி செலவினை குறைக்கவும், வேளாண் உற்பத்தியினை அதிகரிக்கவும், வேளாண் எந்திரங்கள் மற்றும் நவீன வேளாண் கருவிகள் பயன்பாட்டினை அதிகரிக்கும் நோக்கத்துடனும், வேளாண்–தோட்டக்கலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கு அதிகபட்சமாக 50 சதவீதம் மானியம் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, பலவகை தானிய கதிர் அடிக்கும் எந்திரம், களையெடுக்கும் எந்திரம் (8 குதிரைத்திறனுக்கு கீழ்), நான்கு சக்கர களையெடுக்கும் எந்திரம் (20 குதிரைத்திறனுக்கு கீழ்), ஆர்ச்சர்ட் ஸ்பிரேயர், விசைத்தெளிப்பான், பவர்டில்லர் (8 குதிரைத்திறனுக்கு மேல்), உழுவை கருவிகள், நெல் நடவு எந்திரம், டிராக்டர் மற்றும் பவர் டில்லர் இயங்கும் உபகரணங்கள், தேங்காய் மட்டை உரிப்பான், சுழற் கலப்பை, தீவணப்புல் வெட்டும் கருவி, மரம் அறுக்கும் கருவி ஆகியவற்றிற்கு மானியம் வழங்க கிருஷ்ணகிரி

மாவட்டத்திற்கு 224 எந்திரம் மற்றும் உபகரணங்களுக்கு ரூ. ஒரு கோடியே 14 லட்சத்து 75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

விண்ணப்பம்

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி, சர்வே எண், சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம். அதன்படி கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43, செட்டியம்பட்டி ரோடு, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி என்ற முகவரிக்கும், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை சாலை, சென்னசந்திரம், ஓசூர் என்ற முகவரிக்கும் விண்ணப்பித்து பயனடையலாம். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல் முட்டை விலை



முட்டை – 361 காசுகள்

முட்டைக்கோழி (கிலோ) – ரூ.61

கறிக்கோழி (கிலோ) – ரூ.60

## செம்பனார்கோவில் பகுதியில் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை 500 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது



செம்பனார்கோவில் பகுதியில் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு 500 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடைகள் சாவு

நாகை மாவட்டம் செம்பனார்கோவில் அருகே உள்ள கிடாரங்கொண்டான், வலத்தான்பட்டினம், பள்ளக்கொல்லை ஆகிய கிராமங்களில் உள்ள 30 மாடுகள், 30 கன்றுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்தன. இதை அறிந்த நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி மேற்கண்ட கிராமங்களுக்கு நேரில் சென்று நோயை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அதன் பேரில் மண்டல இணை இயக்குனர் ராஜசேகரன், உதவி இயக்குனர் தமிழ்செல்வன் ஆகியோர் தலைமையில் 10 குழுக்களாக பிரிக்கப்பட்டு கோமாரிநோய் தடுப்பதற்கு கால் நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இது குறித்து மண்டல இணை இயக்குனர் ராஜசேகரன் கூறுகையில்:–

செம்பனார்கோவில் பகுதியை சுற்றி உள்ள கிராமங்களில் கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு சுமார் 60 கால்நடைகள் இறந்தன.

மருத்துவக் குழுவினர்

கோமாரி நோயை தடுப்பதற்காக என்னுடைய தலைமையில் 10 மருத்துவக் குழுவினர் பிரிக்கப்பட்டு சுற்றி உள்ள கிராமங்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்

இராணிப்பேட்டை நோய் தடுப்பு நிலையத்தில் இருந்து வல்லுனர்கள் வரவழைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், நோயற்ற கால்நடைகளில் இருந்து மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுகிறது. சுமார் 500 மாடுகளுக்கு சிகிச்சை மற்றும் தடுப்பூசிகளும் போடப்பட்டுள்ளன. நோயுற்ற கால்நடைகளை பாதுகாக்கும் முறை மற்றும் நோய் பரவுவதை தடுத்தல் முறைகள் குறித்து துண்டு பிரசுரம் வழங்கப்பட்டுள்ளது.

<u>தடுப்பூசி</u>

கால்நடைகளுக்கு ஆண்டுக்கு 2 முறை தடுப்பூசி போட்டு கொள்ளவும். மேலும், நோய் வந்த பிறகு கறவை மாடுகளின் பாலை கன்றுகளுக்கு அளிக்காமல் இருக்க வேண்டும். கிருமிநாசினியான சோடியம் கார்பனேட் 4 சதவீதம் மாட்டு தொழுவத்தில் தெளிக்க வேண்டும். மழைக்காலங்களில் கால்நடைகளை மழையில் விடாமல் பாதுகாத்து கொள்ள வேண்டும். மேலும், தற்போது கோமாரி நோய் பரவாமல் இருக்க கட்டுபாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## நாகை சம்பா சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் போதிய அளவில் இருப்பு கலெக்டர் முனுசாமி தகவல்

சம்பா சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு துறையில் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் முனுசாமி கூறினார்.

**<u>விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>**

நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் நடைபெற்ற விவசாயிகளின் விவாதங்கள் வருமாறு:–

மயிலாடுதுறை கடைமடை பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் அலெக்சாண்டர்: மயிலாடுதுறை நகரில் ஓடும் பழைய காவிரி தற்போது குப்பையும், கூளமுமாக நோய் பரப்பும் ஆறாக உள்ளது. எனவே கலெக்டர் அரசிடம் நிதிபெற்று பழைய காவிரியை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது சம்பா சாகுபடி நடைபெற்றுவரும் நிலையில் விவசாயத்திற்கு தேவையான சிங்சல்பேட் உரம் வேளாண்மை கிடங்ககளில் போதிய இருப்பு இல்லாததால் உடனடியாக உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மயிலாடுதுறை கொள்ளிடம் ஆற்றில் மணல்மேடு அருகே பாப்பாகுடி அல்லது சித்தமல்லி பகுதியில் தடுப்பணை அமைக்க வேண்டும். விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க மாவட்ட அமைப்பாளர் முஜீபுசரீக்: கடந்த சட்டமன்ற கூட்டத்தில் தலைஞாயிறு

அரிச்சந்திரா ஆற்றில் தடுப்பணைக் கட்டப்படும் என்று முதல்–அமைச்சர் அறிவித்த திட்டத்தை உடனடியாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் பணியை தொடங்க வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சம்பந்தம்: வேளாண்மை துறையில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பி அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு போய் சேர ஆவண செய்ய வேண்டும்.

**விவசாய உபகரணங்கள்**

புதுமண்ணியார் பாசனதாரர் சங்கத்தலைவர் கோதண்டராமன்: வேளாண்மை துறை சார்பில் வழங்கப்படும் விவசாய உபகரணங்கள் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். மாந்தை ஊராட்சித்தலைவர் பாபு: அனைத்து விவசாய தொழிலாளர்களுக்கும் அரசு ரூ.5 ஆயிரம் கடன் கொடுத்து 100–நாள் வேலை திட்டத்தின் மூலம் கடனை திரும்பி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கிழக்கு பருவமழை காரணமாக நடைபெறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பெயரளவில் இல்லாமல் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன்: கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உடனடியாக பயிர்க்காப்பீட்டு தொகையை பெற்றுத்தர ஆணவ செய்ய வேண்டும். மேலும் நடப்பு ஆண்டிற்கு பயிர்க்கடன் பெறாத விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி பயிர்க்கடன் வழங்க ஆவண செய்ய வேண்டும்.

காவிரிடெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்க பொதுச்செயலாளர் கோபிகணேசன்: வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் ஏற்படும் பாதிப்பினை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அடங்கிய குழுவை ஏற்படுத்தி அவ்வப்போது ஆறுகளையும், வாய்க்கால்களையும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

**பண்ணைக்குட்டைகள்**

பின்னர் இதுகுறித்து கலெக்டர் முனுசாமி கூறியதாவது:–

நாகை மாவட்டத்தில் நடப்பாண்டில் இதுவரை 514.41 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. இது மாவட்டத்தின் இயல்பான மழை அளவான 644 மி.மீட்டரை விட 129.59 மி.மீட்டர் குறைவாகும். அக்டோபர் மாதத்தில் இயல்பான மழை அளவு 212.30 மி.மீட்டர் ஆகும். தற்போது பெய்த மழையளவு 93.43 மி.மீட்டர் ஆகும். எனவே சராசரி மழையளவைவிட இந்த மாதத்தில் 118.87 மி.மீட்டர் மழை குறைவாக பெய்துள்ளது. குறுவை பருவ

சாகுபடியில் இதுவரை சுமார் 22 ஆயிரத்து 15 எக்டேர் அறுவடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பா சாகுபடியில் சுமார் 52 ஆயிரத்து 712 எக்டேர்களில் நேரடி விதைப்பும், 29 ஆயிரத்து 70 எக்டேர் நடவு பணியும், 28 ஆயிரத்து 75 எக்டேர் திருந்திய நெல் சாகுபடி முறையிலும் என மொத்தம் 1 லட்சத்து 9 ஆயிரத்து 857 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள் தனியார் மற்றும் கூட்டுறவு துறையில் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டைகள் அமைக்க 5 ஆயிரத்து 111 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, 4 ஆயிரத்து 316 பண்ணைக் குட்டை பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 2 ஆயிரத்து 154 பண்ணைக் குட்டைப் பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளது. மேலும் விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்து பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேற்றித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கடலூர் மாவட்டத்தில் உரங்களை தட்டுப்பாடு இன்றி வழங்க வேண்டும் குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை

கடலூர் மாவட்டத்தில் பொட்டாஷ், யூரியா உரங்களை தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடலூரில் நடந்த குறைகேட்பு தின கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

குறைகேட்பு தின கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு தின கூட்டம் கடலூரில் உள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அதிகாரி மனோகரன் தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அசோகன், முன்னோடி வங்கி மேலாளர் சேதுராமன், நபார்டு உதவி பொது மேலாளர் ராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விவசாயிகள் கேட்ட கேள்விகளும், அதற்கு அதிகாரிகள் அளித்த பதில்களும் வருமாறு:–

பணம் பிடித்தம்

சொக்கலிங்கம் (விவசாயி):– எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கடந்த 2008–ம் ஆண்டு எத்தனால் தொழிற்சாலை அமைப்பதற்காக விவசாயிகளிடம் பணம் பிடித்தம்

செய்யப்பட்டது. ஆனால் அந்த திட்டம் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் தடை செய்யப்பட்டது. பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை இது வரை விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் திருப்பி வழங்க வில்லை. இந்த திட்டம் செயல்படுமா?

அதிகாரி:– எத்தனால் தொழிற்சாலை அமைப்பது தொடர்பாக கோர்ட்டில் வழக்கு நடந்து வருகிறது. இந்த வழக்கு முடிந்தவுடன் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

உரங்கள் தட்டுப்பாடு

மணிகண்டன் (விவசாயி):– கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. ஆனால் திட்டக்குடி, மங்களூர் ஒன்றிய பகுதிகளில் பொட்டாஷ், யூரியா உரங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யூரியா மட்டும் சமீபத்தில் வந்துள்ளது. அதுவும் பல இடங்களில் கிடைக்க வில்லை. மாவட்டம் முழுவதும் இதே நிலை தான் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆகவே போதிய அளவில் உரங்கள் இருப்பு வைக்க வேண்டும்.

இதை பயன்படுத்தி தனியார் விற்பனையாளர்கள் விலையை உயர்த்தி விற்பனை செய்கின்றனர். இதற்கு வேளாண்மை அதிகாரிகள் தான் காரணம். கடந்த தானே புயலில் எங்கள் பகுதியில் எவ்வித பாதிப்பும் இல்லை என்று அதிகாரிகள் கணக்கெடுத்துள்ளனர். ஆனால் ஊராட்சியில் 4 ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கெடுத்து உள்ளனர். இதில் எது உண்மை என்பதை அதிகாரிகள் விளக்க வேண்டும்.

வேளாண்மை அதிகாரி:– திட்டக்குடி, மங்களூர் ஆகிய பகுதிகள் மட்டுமின்றி மாவட்டம் முழுவதும் பொட்டாஷ், யூரியா போன்ற உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மணல் அள்ள அனுமதிக்க வேண்டும்

குமரகுரு(விவசாயி):– அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் ஏரிகளில் இருந்து விவசாயத்துக்கு மணல் எடுப்பது போல் கடலூர் மாவட்டத்திலும் ஏரிகளில் மணல் அள்ள அனுமதிக்க வேண்டும். உரங்களை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டும்.

பொதுப்பணித்துறை அதிகாரி:– ஏரிகளில் இருந்து மணல் அள்ள அரசு தடை விதித்துள்ளது. சுற்றுச்சூழல் துறை ஒப்புதல் பெற்றால் தான் மணல் அள்ள முடியும்.

மாவட்ட வருவாய் அதிகாரி:– மணல் அள்ள அரசு தடை விதித்துள்ள நிலையில் விவசாயிகளுக்கு மட்டும் அனுமதி தந்தால் பிரச்சினை ஏற்படும்.

டீசல் மானியம்

ரவீந்திரன்(விவசாயி):– தஞ்சை, வேலூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தடுப்பணைகள், தரைதளம் சீரமைத்தல் போன்ற 1,335 திட்டங்களுக்கு முதல்–அமைச்சர் ரூ.287 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த திட்டம் கடலூர் மாவட்டத்தில் செயல்படுத்த வில்லை. கடலூர் மாவட்டத்தில் 92 டி.எம்.சி. தண்ணீர் வீணாக சென்று கடலில் கலக்கிறது. வறட்சி காலங்களில் கடலில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் கொள்ளிடம் ஆற்றில் இருந்து தண்ணீர் எடுக்கப்படுகிறது.

இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதுடன், குடிநீரும் உப்பு நீராக மாறி வருகிறது. மற்ற மாவட்டங்களை போல் கடலூர் மாவட்டத்திலும் இந்த திட்டம் செயல்படுத்தப்படுமா? இதற்கு அதிகாரிகள் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளனரா?. மற்ற மாவட்டங்களை போல் மாவட்ட அளவிலான அதிகாரிகள் ஒரு திட்டம் தயாரித்து அரசுக்கு அனுப்பி நிதி பெற வேண்டும். நீர்ப்பாசன மேம்பாட்டு திட்டத்தில் கடலூர் மாவட்டத்துக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்த வேண்டும். விண்ணப்பித்துள்ள 596 விவசாயிகளுக்கு டீசல் மானியம் வழங்க வேண்டும். மாவட்டத்தில் மணல் எடுக்கவும் அனுமதிக்க வேண்டும்.

1988, 2007–ம் ஆண்டு அரசாணைப்படி ஏரிகளில் விவசாயத்துக்கு மணல் எடுக்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. அதேபோல் மணல் அள்ள அனுமதிக்க வேண்டும்.

வேளாண்மை அதிகாரி:– டீசல் மானியம் வழங்கப்படும். இதற்காக ரூ.13 லட்சம் நிதி உள்ளது. மணல் எடுக்க 2012–ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தடை விதித்துள்ளது.

பட்டா வழங்கக்கூடாது

ரவிச்சந்திரன்(விவசாயி):– வாலாஜா ஏரியில் உள்ள வடிகால் வாய்க்காலை தூர்வார வேண்டும்.

கோபாலகிருஷ்ணன்(விவசாயி):– இந்தியாவிலேயே தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதாக ஆய்வில் தெரிய வருகிறது. எங்கள் பகுதியில் 5 ஏக்கர் பரப்பளவில் குளம் இருந்தது. அந்த குளம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளதால் 2 ஏக்கராக குறைந்துள்ளது. இதற்கு வருவாய், ஊராட்சி துறை பட்டா வழங்கி உள்ளது. இது போன்ற குளம், குட்டை, ஏரி ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு பட்டா வழங்கக்கூடாது.

மாவட்ட வருவாய் அதிகாரி:– விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோதண்டராமன் (விவசாயி):– தனியார் சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்யாத கரும்புகளுக்கு பணம் உடனடியாக வழங்கப்படுகிறது. பதிவு செய்த கரும்புகளுக்கு பல மாதங்கள் கடந்து தான் பணத்தை சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்குகிறது.

சர்க்கரை ஆலை அதிகாரி:– அனைவருக்கும் பாகுபாடின்றி தான் பணம் வழங்கப்படுகிறது.

ஆக்கிரமிப்பு

சக்திவேல்(விவசாயி):– விருத்தாசலம் புறவழிச்சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்துக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் 10 ஏக்கர் பரப்பளவில் உள்ள குளத்தை நத்தம் புறம்போக்கு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை தடுத்து நிறுத்த வேண்டும்.

மாவட்ட வருவாய் அதிகாரி:– அப்படி நடக்க வாய்ப்பில்லை. இருப்பினும் ஆய்வு நடத்திய பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்வாணன்(விவசாயி):– தானே வீடு கட்டும் திட்டத்தில் உண்மையான ஏழை குடும்பத்தினர் இன்னும் வீடு கட்ட வில்லை. ஆனால் வசதிபடைத்தவர்கள் கட்டிய வீட்டுக்கு பணத்தை கொடுத்து, தானே வீடு கட்டியதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இந்த நிலையை போக்க வேண்டும்.

வீராணம் ஏரியை ஆழப்படுத்த வேண்டும்

மாதவன்(விவசாயி):– வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை இன்னும் வழங்கவில்லை. தானே புயலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் தொகை வழங்கப்பட்டது. ஆனால் அந்த தொகையை விவசாயிகளுக்கு நேரிடையாக வழங்காமல் ஏற்கனவே வாங்கிய கடனில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதனால் புதிய கடன் தரவில்லை. ஆகவே புதிய கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடலூர் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். ஏரி, குளங்களை தூர்வார வேண்டும். வீராணம் ஏரியை ஆழப்படுத்த ரூ.40 கோடி நிதி ஒதுக்கி அரசு உத்தரவிட்டது. ஆனால் இந்த திட்டத்தை இன்னும் நடைமுறை படுத்தவில்லை.

சிதம்பரம் கான்சாகிப் வாய்க்காலை தூர்வார வேண்டும். இது போன்ற மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்துள்ளது. ஆனால் இன்னும் பணம் வராமல் எந்த பணிகளும் நடைபெற வில்லை. இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு விவாதங்கள் நடைபெற்றது.

## ரெட்டிச்சாவடி பகுதியில் சாமந்தி பூ விளைச்சல் அமோகம்



ரெட்டிச்சாவடியை அடுத்த மேல்அழிஞ்சுப்பட்டு, கீழ்குமாரமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் சாமந்தி பூ பயிரிடப்பட்டுள்ளது. தற்போது ரெட்டிச்சாவடி பகுதிகளில் மிதமான மழை பெய்து வருவதால் சாமந்தி பூக்கள் அதிக அளவில் பூத்துக் குலுங்குகின்றன. தற்போது சாமந்தி பூ கிலோ ரூ.10 முதல் ரூ.20 வரை விற்பனையாகின்றது. தீபாவளி பண்டிகை வேறு நெருங்கி வருவதால் மேலும் விலை உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபற்றி விவசாயி ஒருவர் கூறியதாவது:–

ரெட்டிச்சாவடி பகுதியில் குறைந்த அளவே சாமந்தி பூ பயிரிட்டு வருகிறோம். ஆனால் மரவள்ளி கிழங்கு, வேர்க்கடலை, வாழை போன்ற பயிர்கள் அதிக அளவில் பயிரிட்டு வருகின்றனர். சாமந்தி பூ பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அளவில் பயிரிடுவதில்லை. இதற்கு காரணம் சாமந்தி பூ பயிரிடுவதற்கு அரசு தரப்பில் இருந்து போதுமான நிதி வழங்குவதில்லை என்று கூறினார்.

## சம்பா சாகுபடி மேற்கொண்டால் கூடுதல் மகசூல் பெறலாம் வேளாண்மை இணை இயக்குனர் ஆலோசனை



திருந்திய நெல் சாகுபடி முறையில் சம்பா சாகுபடி மேற்கொண்டால் கூடுதல் மகசூல் பெறலாம் என்று வேளாண்மை இணை இயக்குனர் ஆலோசனை வழங்கினார்.

**சம்பா சாகுபடி**

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில், உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கான பயிற்சி நடைபெற்றது. இப் பயிற்சி முகாமிற்கு வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான் தலைமை தாங் கினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சதானந்தம் மற்றும் வேளாண்மை அலு வலர் ராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**வேளாண்மை இணை இயக்குநர் பேசியதாவது;-**

நடப்பு சம்பா பருவத்தில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகு படி மேற்கொண்டு சம்பா வில் கூடுதல் மகசூல் பெற்று உணவு உற்பத்தியை அதிகப் படுத்திட, உழவர் மன்ற அமைப்பாளர்கள் உறுதுணை யாக இருக்க வேண்டும். மேலும் அரசு செயல்படுத்தும் வேளாண் திட்டங்களை தங்கள் பகுதி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி உற்பத்தியைப் பெருக்கிட உழவர் மன்ற அமைப்பாளர்கள் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

**தொழில்நுட்பங்கள்**

பின்னர் நடந்த பயிற்சியில், நடப்பு பருவத்தில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், குறிப்பாக வரும் சம்பா பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்தல், நடவு முறையில் துவரை சாகுபடி, உளுந்து பயிரில் 2 சத டிஏபி கரைசல்

தெளித்தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை அலு வலர் எடுத்துக் கூறினார். துணை இயக்குநர் பேசுகையில், அரசு செயல்படுத்தும் மத்திய அரசு திட்டங்களை பற்றி விரிவாக எடுத்துக் கூறி னார். இந்த பயிற்சியில், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அதிகாரி சோமசுந்தரம் கலந்து கொண்டு, விவசாயி களுக்கு நபார்டு மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் உழவர் மன்றங்கள் அமைத்திடத் தேவையான வழிமுறைகளையும் உழவர் மன்ற அமைப் பாளர்களுக்கு எடுத்துக்கூறி சந்தேகங் களுக்கு விளக்கம் தெரிவித்தார்.

**<u>அட்மா திட்டம்</u>**

வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக மத்திய திட்ட வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி கலந்து கொண்டு அட்மா திட்டங்கள் குறித்தும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்தும் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு விளக்கிக் கூறினார்.

முன்னதாக இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களை உழவர் பயிற்சி நிலைய வேளா ண்மை அலுவலர் ராஜசேக ரன் வரவேற்றார். முடிவில் உழவர் மன்ற அமைப்பாளர் கூவாட்டுப்பட்டி முருகேசன் நன்றி கூறினார்.

## பெரம்பலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆர்.டி.ஓ. விசாரணை

குருந்தன்கோடு அருகே திருமணம் ஆன 8-வது நாளில் புதுப்பெண் மர்மமான முறையில் இறந்தார். இது குறித்து ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி வருகிறார்.

**<u>புதுப்பெண்</u>**

குமரி மாவட்டம் இரணியல் போலீஸ் சரகம் வில்லுக்குறி அருகே உள்ளது மாடத்தட்டுவிளை. இந்த ஊரை சேர்ந்தவர் ஞானபிரகாசம். இவருக்கு 5 மகன்கள் உள்ளனர். இளைய மகன் கிளமெண்ட் (வயது 32). இவர் சவுதி அரேபியாவில் ஒரு கம்பெனியில் தர ஆய்வாளராக வேலை பார்த்து வருகிறார்.

இவருக்கும் திக்கணங்கோடு கர்க்கன்குழியை சேர்ந்த ஆசீர்வாதம் என்பவரின் இளைய மகள் ஹெலன்ராணிக்கும் (வயது 29) திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணம் செய்து கொள்ள கிளமெண்ட் 3 மாத விடுமுறையில் ஊருக்கு வந்தார். ஹெலன்ராணி சென்னையில் ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் ஸ்கேன் பிரிவில் வேலை பார்த்து வந்தார். அவரும் விடுமுறையில் ஊருக்கு வந்தார்.பின்னர் இவர்களது திருமணம் கடந்த 18-ந் தேதி நடந்தது. திருமணத்தின்போது மணமகன் வீட்டுக்கு மணப்பெண் வீட்டார் ரூ.10 லட்சம் ரொக்கமும், மற்றும் நகைகள் வரதட்சணையாக கொடுத்து இருந்தனர் என்று கூறப்படுகிறது.

**<u>தூக்குப்போட்டு தற்கொலை</u>**

திருமணத்துக்கு பிறகு ஹெலன்ராணி மாடத்தட்டுவிளையில் புதிதாக கட்டியுள்ள உள்ள கணவர் வீட்டில் தங்கி இருந்தார். அந்த வீட்டில் புதுமண தம்பதியினர் மட்டுமே வசித்து வந்தனர். கடந்த ஒரு வாரமாக புதுமண தம்பதியினர் மணவாழ்க்கையை தொடங்கி உற்சாகமாக இருந்து வந்தனர். கடந்த 23-ந் தேதி புதுமண தம்பதியினர் திக்கணங்கோடு கர்க்கன்குழிக்கு விருந்துக்கு சென்று வந்தனர்.

இந்தநிலையில் திருமணம் ஆன 8-வது நாளான நேற்று காலையில் கிளமெண்ட் மீன் வாங்கி வருவதாக ஹெலன்ராணியிடம் கூறிவிட்டு வெளியே சென்றார். பின்னர் அவர் திரும்பி வீட்டுக்கு வந்தபோது வீட்டின் முன்பக்க கதவு பூட்டப்பட்டு இருந்தது. இதனால் அவர் பின்பக்க கதவு வழியாக வீட்டுக்குள் சென்றார். சமையல் அறையில் ஹெலன்ராணி இல்லாததால் அவர் படுக்கை அறைக்கு சென்று பார்த்தார். அங்கு ஹெலன்ராணி மின் விசிறியில் தூக்கில் பிணமாக தொங்கியதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதுபற்றி அவர் ஹெலன்ராணியின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் தகவல் கொடுத்தார். ஹெலன்ராணியின் பெற்றோரும், உறவினர்களும் அலறி அடித்துக்கொண்டு மாடத்தட்டுவிளைக்கு வந்தனர். அங்கு ஹெலன் ராணி யின் உடலை பார்த்து அவர்கள் கதறி அழுதனர்.

**<u>சாவில் மர்மம்</u>**

இது பற்றிய தகவல் அறிந்த இரணியல் போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கரேஸ்வரன் தலைமையில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து ஹெலன்ராணியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள்.

ஹெலன்ராணி மரணம் குறித்து அவரது அண்ணன் ஜஸ்டின், இரணியல் போலீசில் புகார் செய்தார். புகார் மனுவில் அவர் குறிப்பிட்டு இருப்பதாவது:-

நான் நேற்று (நேற்று முன்தினம்) என் தங்கையின் வீட்டுக்கு சென்றேன். அப்போது எனது தங்கை சந்தோசமாகவே இருந்தார். இன்று (நேற்று) காலை அவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக தகவல் கிடைத்தது. அவரது சாவில் சந்தேகம் உள்ளது. எனவே தீவிரமாக விசாரணை நடத்த வேண்டும்.

இவ்வாறு அவர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

**<u>ஆர்.டி.ஓ. விசாரணை</u>**

திருமணம் ஆன 8-வது நாளிலேயே ஹெலன்ராணி இறந்து இருப்பதால் ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தப்படுகிறது. ஆர்.டி.ஓ. விசாரணையின் முடிவில் ஹெலன்ராணி எப்படி இறந்தார் என்பது தெரிய வரும். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தி உள்ளது

## வறட்சி நிவாரணம் கேட்டு முந்திரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



வறட்சி நிவாரணம் கேட்டு செந்துறையில் முந்திரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தி னர்.

### 70 ஆயிரம் ஏக்கர் முந்திரி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள செந்துறை, ஆண்டி மடம், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் முந்திரி பயிரி டப்பட்டுள்ளது. மாவட்டத் தில் பெரும்பாலான விவசாயி கள் முந்திரியையே நம்பி உள்ளனர்.

கடந்த ஆண்டுகளில் பருவ மழை பெய்யாததால் முந்திரி விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டது. முந்திரி மரங்கள் வெயிலின் தாக்கத் தால் காய்ந்து கருகின. முந்திரி விவசாயத்தை நம்பியே வாழ்ந்த இந்த பகுதி விவசாய குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப் பட்டன. இதனால் விவசாயிகள் பெரும் இன்ன லுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் முந்திரிக்கு உரிய வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் முந்திரிக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று கிராம அதிகாரிகள் மூலம் தகவல் தெரிவிக்கப் பட்டது.

### கணினி சிட்டா

அதன்படி விவசாயிகள் அனைவரும் கணினி சிட்டா எடுத்து வந்து கிராம நிர்வாக அதிகாரிகளிடம் தங்களது நிலங்களை பதிவு செய்ய வேண்டும் என்று கூறினர். இதனால் தாலுகா அலுவலகங் களில் விவசாயிகள் கூட்டம் அலைமோதியது. இதனை கட்டுப்படுத்த முடியாமல் போலீசார் திணறினர். இந்த நிலையில் கணக்கெடுத்து சுமார் 6 மாதங்கள் ஆகியும் இதுவரை நிவாரணம் வழங்கப் படவில்லை. இதனைக் கண்டித்து தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் தாலுகா அலு வலகம் முன்பு மனு கொடுக்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சங்க வட்ட செயலாளர் கந்த சாமி தலைமை தாங்கினார். மாநில துணைத் தலைவர் முகமது அலி, மாநில செயலா ளர் காமராஜூ, மாவட்ட செயலாளர் செல்லதுரை, மாதர் சங்க மாவட்ட தலைவர் தமிழரசி, விவசாய சங்க மாவட்டக்குழு பரமசிவம் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளும் கலந்து கொண் டனர். இந்த ஆர்ப்பாட்டம் செந்துறை பஸ் நிலையத்தில் தொடங்கி ஊர்வலமாக செந் துறை தாலுகா அலுவலகத்தை அடைந் தது.

**<u>தாலுகா அலுவலகத்தில் சமைத்து சாப்பிட்டனர்</u>**

அங்கு ஆர்ப்பாட்டம் செய்த விவசாயிகள் அரசு அறிவித்தபடி உடனடியாக முந்திரி விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். பின்னர் செந்துறை தாசில்தார் ராமச்சந்திரனிடம் மனு கொடுக்க சென்றனர். ஆனால் அவர் மனுவை வாங்க வரவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த விவசா யிகள் தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்டனர். நீண்ட நேரமாகியும் தாசில்தார் வரா ததால் விவசாயிகள் தாலுகா அலுவலகம் முன்பே சமைத்து சாப்பிட்டனர். இதனால் செந்துறை தாலுகா அலுவலகத் தில் பெரும் பரபரப்பு ஏற் பட்டது.

## கனிம வளங்கள் வெட்டி எடுப்பதை தடுக்க வேண்டும் விவசாய சங்க கூட்டத்தில் தீர்மானம்



கடவூர் பகுதியில் கனிம வளங்கள் வெட்டி எடுக்கப் படுவது தடுக்கப்பட வேண்டும் என விவசாய சங்கங்களின் சார்பில் நடைபெற்ற பொது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>பொதுக் கூட்டம்</u>**

தமிழ்நாடு விவசாய சங்கம், தமிழக விவசாயிகள் நல சங்கம் ஆகிய சங்கங்கள் இணைந்து கடவூர் ஒன்றியம், ரெட்டியப் பட்டியில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் பழனி வேல் தலைமை தாங்கினார். விவசாய தொழிலாளிகள் சங்க ஒன்றிய செயலாளர் வேல்முருகன் முன்னிலை வகித்தார். இந்திய ஜனநாய வாலிபர் சங்க ஒன்றியத் துணைத் தலைவர் குமார் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் சிறப்பு அழைப் பாளர்களாக மாவட்ட விவசாய தொழில் சங்க செயலாளர் லக்குவணன், விவசாய சங்க மாவட்ட செயலாளர் சண்முக சுந்தரம், மண்டல பொறுப்பாளர்ஏ.பி.சுப்பையா, ஒன்றிய தலைவர் பாலகிருஷ்ணன், செயலாளர் கருப்பன், உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட செயலாளர் ஆறுமுகம் ஆகியோர் பேசினர். பின்னர் மாநில விவசாய சங்க செய லாளர் ராஜமாணிக்கம் கலந்து கொண்டு பேசினார்.

**<u>தீர்மானங்கள்</u>**

மழை காலங்களில் வீணாகும் காவிரி நீரை கொடுமுடி பகுதியில் சிறிய அணை கட்டி வறட்சி பகுதிகளான அரவக்குறிச்சி, கடவூர், தோகைமலை பகுதி களுக்கு வாய்க்கால் அமைத்து பாசன வழி வகை செய்ய வேண்டும். விவசாயத்திற்கு மும்முனை மின்சார வழங்க வேண்டும். கடவூர் பகுதியில் திருட்டுத்தனமாக வெட்டி எடுக்கப்படும் கனிம வளங்களை பாதுகாக்கவும் உள்பட பல்வேறு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட் டன.

கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் ரத்தினம், வீரப்பன், ஒன்றிய தலைவர் காளியப்பன், பொருளாளர் பெருமாள் உள்பட பலர் கலந்து கொண் டனர்.

முடிவில், விவசாய சங்க பொருளாளர் பாலசுப்பிரமணி நன்றி கூறினார்.

## உரக்கடைகளில் அதிகாரிகள் ஆய்வு ரூ.3 லட்சம் உரம், பூச்சி மருந்து பறிமுதல்




மதுரை மாவட்டத்தில் போலியான மற்றும் கொள்முதல் அனுமதியின்றி உரங்கள், பூச்சி மருந்துகள் விற்கப்படுவதாக மாவட்ட கலெக்டர் மற்றும் வேளாண் அதிகாரிகளுக்கு அடிக்கடி புகார்கள் வந்தன.

இதையொட்டி வேளாண் இணை இயக்குனர் ஜெயசிங் ஞானதுரை ஆலோசனையின்படி, உதவி இயக்குனர் சுருளிபொம்மு, அலுவலர் ரமேஷ்பாண்டி உள்ளிட்ட அதிகாரிகள் கடந்த 2 மாதங்களாக கிழக்குவட்டாரத்தில் ஆய்வு செய்தனர். அதில் உரக்கடைகளில் நடத்தப்பட்ட சோதனையில் அனுமதியின்றி விற்கப்பட்ட ரூ.73 லட்சம் மதிப்புள்ள உரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மதுரை மேற்கு வட்டாராத்தில் உள்ள உரக்கடைகளில் சோதனை நடத்தினர். இதில் ஜம்புரோபுரம் பகுதியில் உள்ள ஒரு கடையில் போலி உரங்கள், பூச்சி மருந்துகள் விற்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அந்த கடையில் இருந்த ரூ.1¼ லட்சம் மதிப்புள்ள பூச்சிமருந்து, உரங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

மேலூரில் ஒரு உரக்கடையில் கொள்முதல் உரிமம் இல்லாமல் இயற்கை உரம் என்ற பெயரில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த சுமார் ரூ.2 லட்சம் மதிப்புள்ள சல்பர் உரங்கள், கடல்பாசி உரங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

## கண்மாயில் மணல் அள்ளுவது குறித்து இரு தரப்பினரிடையே வாக்குவாதம்

## போலி பூச்சி மருந்தால் பாதிப்பு ஏற்படுவதாக விவசாயிகள் புகார்

விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறை தீர்க் கும் நாள் கூட்டத்தில் கண்மாயில் மணல் அள் ளும் பிரச்சினை தொடர் பாக கலெக்டர் முன்னி லையில் இரு தரப்பினரி டையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

**குறை தீர்க்கும் கூட்டம்**

விருதுநகர் கலெக்டர் அலு வலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் விவ சாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழ்நாடு விவசா யிகள் சங்க பிரதிநிதிகளும், பல்வேறு விவசாய அமைப்பு களின் நிர்வாகிகளும், விவசாயி களும், அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு விவ சாயிகள் சங்க மாவட்ட செய லாளர் விஜய முருகன் பேசும் போது, குறை தீர்க்கும் கூட்டத் தில் விவசாயிகள் எடுத்துச் சொல்லும் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படு வதில்லை என்று புகார் கூறிய துடன், காரியாபட்டி அருகே மாங்குளம் பஞ்சாயத்தில் உள்ள மொச்சிபத்தி கண்மா யில் அரசின் விதிமுறைகளை மீறி 30 அடி ஆழம் வரை மணல் அள்ளியதால் விவசாயி களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார். இது குறித்து மாவட்ட நிர்வாகத் திடம் கோரிக்கை மனு கொடுத் தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

**வாக்குவாதம்**

இதனைத் தொடர்ந்து கூட்ட அரங்கில் இருந்த மாங் குளம் பஞ்சாயத்து தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட அக் கிராமத்தினர் மொச்சிபத்தி கண்மாயில் மணல் அள்ளுவ தற்கு பஞ்சாயத்து நிர்வாகமே தீர்மானம் நிறைவேற்றி உள் ளது என்றும், மாங்குளம் பஞ்சாயத்தில் பாசன நிலங்களே இல்லாத நிலையில், பாதிப்பு ஏதும் ஏற்பட வில்லை என்றும் கூறியதோடு, தமிழ்நாடு விவ சாயிகள் சங்க தலைவர் விஜய முருகனோடு கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து கலெக்டர் ஹரிஹரன் கடந்த 21-ந்தேதி முதல் மொச்சிபத்தி கண்மா யில் மணல் அள்ளுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். எனினும் இரு தரப்பினரிடையே வாக்கு வாதம் நீடித்தது. உடனடியாக போலீசார் அரங்கிற்குள் நுழைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களை சமரசம் செய்ததுடன், உங்கள் கருத்துக் களை கலெக்டர் கேட்கும் போது தெரிவிக்க வேண்டுமே தவிர, கூட்ட அரங்கில் வாக்கு வாதத்தில் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தினர். இதன் பின்னர் அமைதிஏற்பட்டது.

**புகார்**

ராஜபாளையத்தைச் சேர்ந்த விவசாய அமைப்பின் நிர்வாகி ராமச்சந்திர ராஜா பேசுகை யில், போலி பூச்சி மருந்தினால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாக வும், இதற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் கூறினார். இதற்கு பதில் அளித்த கலெக்டர் ஹரிஹரன் விவசாயிகளுக்கு மாற்று மருந்து

கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். ஆனால் விவசாயிகள் மாற்று மருந்து தேவையில்லை என் றும், போலி பூச்சி மருந்து வினியோகத்துக்கு காரண மான அதிகாரிகள் மீது நடவ டிக்கை எடுக்க வேண்டும் என் றும் வலியுறுத்தினர். இதைய டுத்து விவசாயிகளின் பல் வேறு கோரிக்கைகளை கேட்ட கலெக்டர் ஹரிஹரன் உரிய நடவடிக்கை எடுப்பதாகஉறுதி அளித்தார்.

## <u>பாதிப்பு</u>

கூட்டத்திற்குப் பின் தமிழ் நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் விஜய முருகன் தினத்தந்தி நிருபரிடம் கூறியதாவது:-

மொச்சிபத்தி கண்மாயை பொறுத்த மட்டில் விதிமுறை களை மீறி மணல் அள்ளியதால் அருகில் உள்ள பாரப்பத்தி கிராம விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த கண்மாயை ஆய்வு செய்த மாவட்ட வருவாய் அதிகாரி விதிமுறைகளை மீறி மணல் அள்ளியதை உறுதி செய்ததால் மணல் அள்ளுவதற்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் மணல் அள்ள அனு மதி கோரிய போது மீண்டும் மணல் அள்ள அனுமதி அளிக் கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மணல் அள்ள தடை விதிக்க வேண்டு மென்று வலியுறுத்தியதன் பேரில் மீண்டும் தடை விதிக் கப்பட்டது.

மாவட்ட நிர்வாகம் உறுதி யான நடவடிக்கை எடுக்காமல் அவ்வப்போது உத்தரவுகளை மாற்றி மாற்றி பிறப்பிப்பதால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. எனவே மொச்சி பத்தி கண்மாய் பகுதியை கலெக்டரே நேரில் ஆய்வு செய்து விதிமுறைகளை மீறி யுள்ளது உறுதியாகும் பட்சத் தில் அந்த கண்மாயில் மணல் அள்ள நிரந்தர தடை விதிக்க வேண் டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்படும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் மு.கருணாகரன் தகவல்



நெல்லை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்படும் என்று கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

<u>விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்</u>

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. கலெக்டர் கருணாகரன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் பி.உமாமகேசுவரி, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்தரராஜன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாயி கசமுத்து:– நெல்லை மாவட்டத்தில் அறுவடை பணி நடந்து வருகிறது. இப்போது அணைகளில் தண்ணீர் திறந்துவிடுவதால் விளைந்த நெற்பயிர்கள் சேதம் அடைந்து விடும். எனவே அறுவடைக்கு தயாராக இருகிற பகுதிகளுக்கு தண்ணீர் விடக்கூடாது. தண்ணீர் திறக்கும் போது விவசாயிகளிடம் கருத்து கேட்டு தான் தண்ணீர் திறக்கவேண்டும் என்றார்.

அப்போது விவசாயிகள் அனைவரும், அறுவடை நடக்கும்போது ஆற்றில் தண்ணீர் திறந்து விடக்கூடாது என்று கூறினார்கள்.

கலெக்டர்:– எந்த பகுதியில் அறுவடை நடக்கிறது என்பதை கூறினால், அந்த பகுதிக்கு தண்ணீர் விடாமல் தேவைப்படுகின்ற பகுதிக்கு மட்டும் தண்ணீர் விடப்படும்.

கசமுத்து:– மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் ஷட்டர் பழுதடைந்து உள்ளது. அதை உடனே சரி செய்ய வேண்டும். விவசாயிகள் கொடுக்கிற மனுக்களுக்கு உடனே பதில் வழங்குவதில்லை. நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள். எனவே உடனே நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

<u>கொள்முதல் நிலையம்</u>

பாலாமடை சொக்கலிங்கம்:– நெல் அறுவடை நடைபெறுகின்ற பகுதியில் உடனடியாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும்.

கலெக்டர்:– கடந்த ஆண்டு எந்த இடத்தில் எல்லாம் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டதோ அந்த இடங்களில் எல்லாம் நாளை (அதாவது இன்று சனிக்கிழமை) முதல் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கொடுத்த மனுக்களுக்குள் எழுத்து பூர்வமாக பதில் வழங்கப்படும்.

சந்திரன்:– களக்காடு செங்கல்தேரி பகுதியில் உள்ள கருமாண்டி அம்மன் கால்வாயில் உள்ள 2–வது அணைக்கட்டு பகுதியில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரி செய்யவேண்டும்.

அதிகாரி:– உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>ராமநதி ஜம்புநதி இணைப்பு திட்டம்</u>

சேக்மைதீன்:–ராமநதி ஜம்புநதி இணைப்பு திட்டம் எப்படி உள்ளது.

அதிகாரி:– இந்த திட்டத்திற்காக கடந்த 37 ஆண்டுகளாக ராமநதியில் உள்ள உபரிநீரின் அளவை கணக்கீடு செய்வதில் புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். மேலும் ராமநதி ஜம்பு நதி இணைப்பு திட்டத்திற்கு ரூ.8 கோடியே 87 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

கசமுத்து:– தாமிரபரணி ஆற்றில் ஏற்படுகின்ற உபரிநீரை ராதாபுரம் பகுதிக்கு கொண்டு செல்ல வீரவநல்லூர் அருகே கால்வாய் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த பணியில் தற்போது பாதியில் கிடக்கிறது. களக்காடு, நாங்குநேரி பகுதியில் 7 லட்சம் வாழைகள் சேதம் அடைந்து உள்ளது. அந்த விவசாயிகளுக்கு இது வரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

<u>காட்டு எருமை தொந்தரவு</u>

உமர்பாருக்:– கடையநல்லூர், புளியங்குடி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரபகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு காட்டு யானைகள், கரடி, பன்றி, காட்டு எருமை ஆகியவை வந்து பயிர்களை அழித்து அட்டகாசம் செய்து வருகிறது. கடந்த மாதம் எனது சகோதரர் மைதீன்பிச்சை எங்களுடைய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது காட்டு எருமை ஓடிவந்து முட்டியதில் குடல் சரிந்து, கால் முறிந்து தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு நிவாரணம் வழங்கவேண்டும். இந்த கோரிக்கையை வற்புறுத்தி மற்ற விவசாயிகளும் பேசினார்கள்.

கலெக்டர்:– உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். யானை உள்ளிட்ட காட்டு மிருகங்கள் விளைநிலங்களுக்கு வராதபடி 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அகழி அமைக்கப்படும். இரவு நேரங்களில் வனத்துறை காவலர்கள் மூலம் அவற்றை விரட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>அடையாள அட்டை</u>

குறிச்சி கணேசன்:– சிறு குறுவிவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். பாளையங்கால்வாய் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும்.

குலய அண்ணாமலை:– நெல்லை மாவட்டத்தில் சரியாக மழை பெய்யாததால் கடையம், பாவூர்சத்திரம் பகுதியில் தென்னை மரங்களும், எலுமிச்சை மரங்களும் பட்டு போய்விட்டன. இந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும்.

வேளாண்மை அதிகாரி:– தென்னை, எலுமிச்சை மரங்களுக்கு இன்சூரன்ஸ் செய்ய வேண்டும். உரிய நிவாரணம் வழங்கப்படும்.

இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந்தது.

கூட்டத்தில் விவசாய கருவிகளான டிராக்டர், களை எடுக்கும் கருவிகள் உள்ளிட்ட கருவிகளும், தோட்டக்களைத்துறையின் சார்பில் மா, நெல்லி, சப்போட்டா உள்ளிட்ட காய்களின் கண்காட்சியும், இயற்கை உரம் தயாரித்தல் கண்காட்சியும் வைக்கப்பட்டு இருந்தது.

# நெல்லை மாவட்டத்தில் சாகுபடிக்கு 4 அணைகள் திறப்பு கலெக்டர் கருணாகரன் திறந்து வைத்தார்



நெல்லை மாவட்டத்தில் சாகுபடிக்கு 4 அணைகள் நேற்று திறக்கப்பட்டன. கலெக்டர் கருணாகரன் அணைகளில் தண்ணீரை திறந்து வைத்தார்.

<u>4 அணைகள் திறப்பு</u>

நெல்லை மாவட்டத்தில் விவசாயிகள் பிசான சாகுபடி செய்ய வசதியாக பாசனத்துக்கு அணைகள் திறக்கப்பட்டு வருகின்றன. நேற்று கடையம் ராமநதி அணை, ஆழ்வார்குறிச்சி அருகே கடனா அணை மற்றும் கருப்பாநதி அணை, அடவிநயினார் கோவில் அணை ஆகிய 4 அணைகள் நேற்று சாகுபடிக்கு திறக்கப்பட்டன. கலெக்டர் கருணாகரன் அணை ஷட்டரை திறந்து வைத்தார்.

கடையம் ராமநதி அணையில் இருந்து வடகால், தென்கால், பாப்பான்கால் மற்றும் புதுக்கால் ஆகிய கால்வாய்களுக்கு தண்ணீர் செல்கிறது. இந்த கால்வாயின் மூலம் நேரடியாக 1527.19 ஏக்கர் நிலமும், மறைமுகமாக 3,416.32 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 4,943.51 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

நேற்று முதல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31–ந் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தற்போது ராமநதி அணையில் 55 அடி அளவுக்கு நீர் இருப்பு உள்ளது. அணைக்கு 60 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதுகுறித்து கலெக்டர் கருணாகரன் கூறியதாவது:–

32 ஆயிரம் ஏக்கர் நிலம்

கடனா அணையை பொறுத்தவரை அந்த அணையில் இருந்து பாசனத்துக்கு 125 கன அடி தண்ணீரும், கருப்பாநதி அணையில் இருந்து 25 கன அடி தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளது. இதே போல் அடவிநயினார் அணையில் இருந்து 45 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு இருக்கிறது.

அம்பை, ஆலங்குளம், தென்காசி, செங்கோட்டை, வீரகேரளம்புதூர் ஆகிய தாலுகாக்களை சேர்ந்த விவசாயிகள் இதன் மூலம் பயன் அடைவார்கள். அணைகள் திறக்கப்பட்டதன் மூலம் மொத்தம் 32 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. அனைத்து அணைகளில் இருந்தும் அடுத்த ஆண்டு மார்ச் 31–ந் தேதி வரை தண்ணீர் திறக்கப்படும்.

சிக்கனமாக பயன்படுத்தவும்

எதிர்வரும் பருவமழையின் அளவை பொறுத்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும். தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விவசாயத்துக்கு தேவையான விதை நெல், உரம் மற்றும் இடுபொருட்கள் போதிய அளவில் இருப்பில் உள்ளன.

அணை திறப்பு நிகழ்ச்சியில் சிற்றாறு வடிநில கோட்ட பொறியாளர் நிர்மல் கிறிஸ்துதாஸ், துணை செயற்பொறியாளர் ஞான சேகரன், இளைநிலை பொறியாளர் அப்துல் ரகுமான், உதவி பொறியாளர் முருகேசன், வடகால் பாசன தலைவர் ஜீவா, பாப்பான்கால் பாசன தலைவர் வேல்பாண்டியன், புதுக்கால் பாசன தலைவர் சங்கு கிருஷ்ணன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி வேளாண்மை இணை இயக்குனர் தட்சணாமூர்த்தி தகவல்

தூத்துக்குடி மாவட்டத்தில் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும் என்று வேளாண்மை இணை இயக்குனர் தட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

உற்பத்தியை அதிகரிக்க

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மக்காச்சோளம், எண்ணெய் வித்துகள் மற்றும் துவரை சாகுபடி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தொழில்நுட்ப பயிற்சிகள் அனைத்தும் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் மூலம் வழங்கப்பட உள்ளது.

ஐசோபார்ம் மக்காச்சோளம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 100 விவசாயிகளுக்கும், ஐசோபார்ம் எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் 500 விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும். இதற்காக மக்காச்சோள பயிற்சிக்கு ரூ.30 ஆயிரமும், எண்ணெய் வித்து பயிற்சிக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சியும் 50 விவசாயிகள் வீதம் 2 நாட்கள் நடைபெறும்.

சாகுபடி தொழில்நுட்பங்கள்

இந்த பயிற்சியில் விதைப்பு முதல் அறுவடை வரையிலான சாகுபடி தொழில்நுட்பங்கள் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர், வேளாண் ஆராய்சி நிலைய பேராசிரியர்கள் மற்றும் வேளாண் அறிவியல் வல்லுனர்கள் மூலம் விளக்கி கூறப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு, மதிப்பூதியம், மதிய உணவு ஆகியவை வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் கலந்து கொள்வதற்கு வசதியாக தங்களது பெயரை சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குனரிடம் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நடவு சாகுபடி

நமது மாவட்டத்தில் துவரை சாகுபடி பரப்பை அதிகரிக்கும் பொருட்டும், உற்பத்தியை அதிகரிக்கவும் துவரையில் நடவு சாகுபடி தொழில் நுட்பங்கள் பயிற்சிகளின் மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட உள்ளது. நமது மாவட்டத்தில், வட்டாரத்திற்கு 30 விவசாயிகள் வீதம் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும். மொத்தம் 10 பயிற்சிகள் நடத்தப்படும். இதற்காக ரூ.1 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது.

இந்த பயிற்சிகளில் கலந்து கொள்ளும் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருட்கள், நுண்ணீர் பாசன அமைப்புகள் மானிய விலையில் வழங்கப்படும். எனவே விவசாயிகள் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.